**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074734
C

1. District : மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2024** FIR No.: மு.த.அ. எண் **01/2024** Date: நாள் **03.02.2024**

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **06.11.2023** Date to : நாள் வரை **30.01.2024**
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **03.02.2024** Time : நேரம் **0900 Hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time : நேரம் **1000 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **45 Kms North -East**
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி **Village Administrative Office, Mandakolathur Vill, Polur TK,Tiruvannamalai Dt.**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.A.Ganesan**
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.Annamalai**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-51**
(d) Nationality : நாட்டினம் **Indian**
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **Farmer**
(g) Address : முகவரி **Perumal kovil Street, Mandakolathur Vill & Post, Polur TK Tiruvannamalai District**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**Tr.Irulappan, Village Administative Officer, Mandakolathur VAO Office, Polur TK, Tiruvannamalai Dt.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் 03.02.2024 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் A.கணேசன், வயது-51, த/பெ.அண்ணாமலை, பெருமாள் கோயில் தெரு, மண்டகொளத்தூர் கிராமம் (ம) அஞ்சல், போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் A. கணேசன், வயது- 51/2024, த/பெ.அண்ணாமலை, பெருமாள் கோயில் தெரு, மண்டகொளத்தூர் கிராமம் (ம) அஞ்சல், போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர் உயர்திரு. காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை மாவட்டம். ஐயா, நான் போளூர் வட்டம் மண்டகொளத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகி இரண்டு

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A.கணேசன் 3.2.24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

03.02.2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.02.2024, 10.30 am

Name: பெயர் S. VELMURUGAN
Rank: நிலை DSP VDAC TVM No. எண் .........

மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். என்னுடைய மனைவி முனியம்மாள். நான் என் மனைவியுடன் எனக்கு சொந்தமான எங்கள் கிராமத்தில் உள்ள சுமார் 2 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து ஜீவனம் செய்து வருகிறேன். கடந்த 08.05.2002 -ல் சென்னை அடையாரை சேர்ந்த M.V. வெங்கடேச ஐயர் குமாரர் M.V.வீரராகவன் அவர்களிடமிருந்து கிரையமாக ஆவண எண் 890/2002 -ல் என்னுடைய பெயரில் பிராமணர் தெருவில் காலிமனையை கிரையம் பெற்றேன். மேற்படி கிரையம் பெற்ற இடமானது வருவாய் துறை பதிவேட்டில் காலி நத்தமாக பதிவில் உள்ளது என்பதால், இந்த இடத்தை பத்திரத்தின் அடிப்படையிலேயே கடந்த 2002 -ல் இருந்து என்னுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது. மேலும் நான் கடந்த அக்டோபர் 2023 -ல் நான் ஆரணி வருவாய் கோட்டாட்சியரிடம் என்னுடைய அனுபவத்தில் இருந்துவரும் மண்டகொளத்தூர் கிராம பிராமத்தில் உள்ள காலிமனைக்கு பட்டா வழங்குமாறு மனு அளித்திருந்தேன். இதுசம்மந்தமாக எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலர் திரு. இருளப்பன் அவர்கள் என்னை அழைத்து விசாரணை செய்தார். பின்னர் வருவாய் துறையினர், சர்வேயர் அவர்களும் என்னுடைய அனுபவத்தில் உள்ள விட்டு மனையை அளவீடு செய்தனர். இதுசம்மந்தமாக கடந்த 06.11.2023 ஆம் தேதி என்னுடைய பெயரில் புதிய புல எண் உட்பிரிவு 853/4B நத்தம், என்னுடைய மனைவி முனியம்மாள் பெயரில் 853/4C படிவம்-4 மனைவாரி தோராய பட்டாவை கிராம நிர்வாக அலுவலர் திரு. இருளப்பன் என்னிடம் கொடுக்கும் போது இந்த மனைவாரி தோராயபட்டா வழங்குவதற்கு எனக்கு மட்டும் அலுவலக செலவாக மொத்தம் ஒரு பட்டாவிற்கு ரூ.40,000/- வீதம் இரண்டு பட்டாவிற்கு ரூ.80,000/- என என்னிடம் இலஞ்சமாக கேட்டார். நான் அதற்கு நானே விவசாய கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறேன் என்னால் அவ்வளவு இலஞ்ச பணம் தர இயலாது என்று சொல்லி விட்டேன். அதற்கு அவர் நீ இந்த மனைவாரி தோராய பட்டாவிற்கு இலஞ்சமாக ரூ.80,000/- தரவில்லை என்றால் நான் இங்கு அதிகாரியாக இருக்கும் வரை கிராம நிர்வாக அலுவலகத்தில் உனக்கு எந்த வேலையும் நடக்காதவாறு நான் பார்த்து கொள்வேன் என்று சொன்னார். நான் அதற்கு இவ்வளவு பணம் என்னால் புரட்ட முடியாது என சொல்லிவிட்டு வந்து விட்டேன். பின்னர் கடந்த 30.01.2024 அன்று மதியம் சுமார் 2 மணியளவில் நான் மண்டகொளத்தூர் கிராம நிர்வாக அலுவலரை அவரது அலுவலகத்தில் சென்று சந்தித்து அவரிடம் எனக்கு சொந்தமான நிலத்தில் கரும்பு பயிர் செய்துள்ள காரணத்தால், மண்டகொளத்தூர் கூட்டுறவு வங்கியில் விவசாய பயிர் கடன் பெறுவதற்காக அடங்கல் பெற சென்றேன். அப்போது அலுவலகத்திலிருந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.இருளப்பன் அவர்களிடம் கூட்டுறவு வங்கியில் விவசாய பயிர் கடன் பெறுவதற்காக அடங்கல் வேண்டும் என்று கேட்டதற்கு கோபத்துடன் ஏற்கனவே மனைவாரி தோராய பட்டா உனக்கும் உன் மனைவிக்கும் வழங்கியதற்கு இதுநாள் வரை ரூ.80,000/-த்தை கொடுக்கவில்லை என்றும், உனக்கு ஏன் நான் அடங்கல் தர வேண்டும் என்றும், எனக்கு என்ன தலையெழுத்தா என்று சொல்லி அலுவலக செலவிற்கும் மேலதிகாரிக்கும் பணம் தராமல் உன்னால் அவதிக்குள்ளானேன் என்று சொன்னார். நான் அதற்கு ஐயா நானே விவசாய கூலி என்னால் எப்படி அவ்வளவு இலஞ்சப்பணம் கொடுக்க முடியும் என்று சொன்னேன். அதற்கு அவர் நீ பயிர்க்கடன் வாங்க உனக்கு அடங்கல் கொடுக்கவும், ஏற்கனவே நீ பெற்றுக்கொண்ட மனைவாரி தோராய பட்டாவிற்கும் சேர்த்து ரூ.80,000/- கொடுத்தால் தான் அடங்கல் தர முடியும் என்று சொன்னார். நான் மிகவும் கெஞ்சி கேட்டதற்கு அவர் முதலில் இலஞ்சமாக ரூ.40,000/- கொடுத்து அடங்கல் என்னிடம் வாங்கிக்கொள், பின்னர் பயிர்க்கடன் பெற்றவுடன் மீதி இலஞ்ச தொகையை கொடுக்க வேண்டும் என்று கராராக கூறி அனுப்பிவிட்டார். எனக்கு கிராம நிர்வாக அலுவலருக்கு இலஞ்சம் தர விருப்பம் இல்லை என்பதால் என்னிடம் லஞ்சம் கேட்ட மண்டகொளத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.இருளப்பன் மீது சட்டரீதியான நடவடிக்கை

எடுக்குபடி எனக்கு தெரிந்த நபர் மூலம் கணினியில் தட்டச்சு செய்து தங்களிடம் புகார் மனு அளிக்கிறேன். எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிந்து கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd XXXXXX)

Sir,

Received the complaint on 03.02.2024 at 09.00 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 03.02.2024 at 10.00 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.01/2024, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. (Sd/-XXXXX) 03.02.2024. S.Velmurugan, Deputy Superintendent of Police, V&AC, Tiruvannamalai. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned.

03.02.2024

S. VELMURUGAN
(Deputy Superintendent of police
V & AC Tiruvannamalai